**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.66/2010**

2026–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3–ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

P.W.2 புவனேஸ்வரி, வயது 42, க/பெ கார்த்தி.

**குறுக்கு விசாரணை (பிரதிவாதிகள் 4 மற்றும் 9 தரப்பு)**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் +2 வரை படித்துள்ளேன். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை நான் சொல்லிதான் என் வழக்கறிஞர் தயார் செய்தார் என்றாலும், அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 1ம் வாதி முனுசாமி என்பவர் என் தந்தை என்றால் சரிதான். 2ம் வாதி அனுசுயா அம்மாள் என் தாயார் என்றால் சரிதான். வழக்கை முதலில் தாக்கல் செய்தது என் தந்தை என்றால் சரிதான்.

2. வழக்கு நிலுவையில் இருக்கும் போது என் தந்தை இறந்து விட்டதால் அவருடைய வாரிசுதாரர்களாக நான், என் அம்மா மற்றும் அண்ணன், அக்கா ஆகியோர் இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளோம் என்றால் சரிதான். இவ்வழக்கில் என்ன பரிகாரம் கோரியுள்ளோம் என்றால் சொத்து எங்களுடையது என்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம். இவ்வழக்கு சொத்தானது ஆரணி தாலுக்கா, கொளத்தூர் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான்.

3. எனக்கு முன்னர் வா.சா.1 ஆக என் அண்ணன் சாட்சியம் அளித்தார் என்றால் சரிதான். அவர் தரப்பில் என்னென்ன ஆவணங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்தின் சர்வே எண்.127/1 விஸ்தீரணம் 2 ஏக்கர் மற்றும் 1 கிணறு உள்ளது. குப்புசாமி முதலியார் என் தந்தையின் உடன் பிறந்த சகோதரர் ஆவார். மேற்படி சர்வே எண் என் தந்தை மற்றும் பெரியப்பா குப்புசாமி முதலியார் ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

4. என் பெரியப்பா மற்றும் என் தந்தையும் 09.03.1962 அன்று நிலத்தையும், வீட்டையும் பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். எங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள 61 ஆவணங்களில் மேற்படி பாகப்பிரிவினை பத்திரம் உள்ளதா என்றால் சாட்சி ஆவணங்களை பார்த்து விட்டு இல்லை என்று கூறினார்.

5. நாங்கள் மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தை தாக்கல் செய்யாததது குறித்து எங்கள் வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது. மேற்படி பாகப்பிரிவினை ஆவணப்படி சர்வே எண்.127/1ல் என் தந்தை முனுசாமிக்கு வடக்கு பக்கம் பாதியும், என் பெரியப்பா குப்புசாமிக்கு தெற்கு பக்கம் பாதியும், கிணற்றில் இருவருக்கும் பொதுவில் பாகமாக பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினைப்படிதான் என் தந்தையும், பெரியப்பாவும் ஆண்டு அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான்.

6. என் பெரியப்பாவிற்கு பாகப்பிரிவினையில் பாத்தியப்பட்ட சொத்தை கிருஷ்ணன் என்பவருக்கு 04.06.1962ம் தேதி கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது. அதன் பின்னிட்டு கிருஷ்ணன் கிரையம் பெற்ற சொத்தை பாக்கியம்மாள் என்பவருக்கு 11.04.1964 அன்று கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது.

7. என் தந்தையின் அக்கா ராஜம்மாள் என்பவரின் மகன்தான் சோமசுந்தரம் என்றால் சரிதான். சோமசுந்தரம் என்பவரின் மகன்தான் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். பாக்கியம்மாள் கிரையம் பெற்ற இடத்தை 30.01.1966 அன்று சோமசுந்தரத்திற்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி கிரையப்படி சோமசுந்தரத்திற்கு தெற்கு பக்க சொத்து

பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. பெயரளவிற்கு மட்டும்தான் சொத்து சோமசுந்தரம் பெயரில் உள்ளது, ஆனால் கிரையம் பெற்ற போது என் பெயரில் கிரையம் பெற்றாலும், சொத்து உன்னுடையதுதான் என்று என் தந்தையை நம்ப வைத்தார்.

8. மேற்படி ஆவணத்தில் எந்த வாசகமும் அவ்வாறு குறிப்பிட்டு இல்லை என்றால் சரியல்ல. குப்புசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்து எங்களுக்கு உரிமையானது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு அதைப் பற்றி தெரியாது.

**பிரதிவாதிகள் 5 மற்றும் 7 ஆஜர். பிரதிவாதிகள் 4 மற்றும் 9 தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
Arni